**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**
**CASE NO.SC. 147 /2024**

**Deposition of P.W.2**

Name : சிபு

S/o, D/o, W/o : குனிகண்ணன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**Dated: 22.10.2025**

Accused absent. Petition filed and allowed.

<u>முதல் விசாரணை</u>–

நான் கல்லோட்டில் வசித்து வருகிறேன். கேரளா அரசு பேருந்து பாறைசாலை பணிமனையில் ஓட்டுனராக பணியாற்றி வருகிறேன். அ.சா.1 என்னுடன் பணிபுரியும் நடத்துனர். 10.03.2016ம் தேதி இரவு 10.30 மணிக்கு காட்டாத்துறை அருகே இருசக்கர வாகனத்தில் வந்த பார்த்தால் அடையாளம் தெரியும் இரண்டு பேர் பேருந்தின் மீது கல்லால் எறிந்து விட்டார்கள். (எதிரிகள் இருவரும் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை எனவே சாட்சியிடம் எதிரிகளை காட்டி கேட்க இயலவில்லை) அ.சா.1 சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த இடம் இருட்டான இடம் என்றால் சரிதான். ஆனால்

TN 75 R 0088 வாகனத்தில் வந்த நபர்கள் தான் எறிந்தார்கள். போலீசார் விசாரிக்கும் பேது எதிரிகளின் அடையாளம் குறித்து கூறவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தின் அடையாளம் தான் கூறினோம். இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை சரியாக அடையாளம் பார்க்காதால் போலீசாரிடம் எதிரிகளின் அடையாளம் குறித்து கூறவில்லை என்றால் சரியல்ல. 10.03.2016ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 11.03.2016ம் தேதி எதிரிகளை கைது செய்து அடையாளம் காட்டி கொடுத்தோம் என்று சொன்னால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து போலீசார் எதிரிகள் தான் பேரூந்தில் கல்லால் எறிந்தவர்கள் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் எதிரிகளை அடையாளம் கூறினேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து போலீசார் புகார் எழுதவில்லை. சம்பவ இடத்தில் வைத்து அ.சா.1 புகார் கொடுக்கவில்லை. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. அ.சா.1க்கும் தமிழ் எழுத படிக்க தெரியாது. போலீசார் புகார் எழுதவில்லை, வேறு ஒரு நபரை வைத்து புகாரை எழுதினார்கள். புகாரில் அதனை எழுதியவர் பெயர் குறிப்பிடவில்லை. புகாரில் வேறு ஒரு நபரால் எழுதப்பட்டது என்றும் குறிப்பிடப்படவில்லை. மலையாளத்தில் சொல்ல, சொல்ல தமிழில் எழுதப்பட்டதாகவும் குறிப்பு இல்லை. விபத்தின் காரணமாக கண்ணாடி உடைந்ததாக சான்று பெற்றுள்ளோம் என்றால் சரிதான். சான்றில் கல்லால் எறிந்து பேரூந்து சேதப்படுத்தப்பட்டதாக குறிப்பிடவில்லை. அ.சா.1 சொன்ன தேதியில் சொன்ன வித்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து புகார்மனு தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும்

வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. விபத்தினால் ஏற்பட்ட சேதத்தை ஈடுசெய்ய பொய்யான புகார் மனு கொடுத்தோம் என்றால் சரியல்ல.